09.10.2025

CC No. 22/2024

ம.சா. 1 வீரமணிகண்டன் த/பெ. கண்ணன், காரைக்குடி

குறுக்கு விசாரணை

1) நான் காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி பைக்ஸ் மற்றும் சிவகங்கை மீனாட்சி பைக்ஸ் ஆகிவற்றில் நான் மேலாளராக பணிபுரிந்தேன் என்றால் காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி பைக்ஸ் கம்பெனியில் வேலை செய்தேன். மேற்படி நிறுவனத்திற்கு சிங்கம்புனரி, சிவகங்கை, திருப்பத்தூர், மானாமதுரை, தேவகோட்டையில் கிளைகள் உள்ளது என்றால் சரிதான். காரைக்குடியில் உள்ள நிறுவனத்திற்கு நாராயணன் என்பவர்தான் உரிமையாளர் என்றால் சரிதான். சிவகங்கை நிறுவனத்திற்க அவரது குமாரர் என். இராமசாமி என்பவர் உரிமையாளர் என்றால் சரிதான். நான் மேற்படி நிறுவனத்தில் எப்போது வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 10.02.2017 ல் வேலைக்கு சேர்ந்தேன். முதலில் இன்டென்சிப் ஒரு மாதம் எனக்கு கொடுத்தார்கள். அதன் பின்னர் மேற்படி நிறுவனத்தில் என்னை நிர்வாகத்திற்கு மாற்றினார்கள் என்றால் சரிதான். படிப்படியாக நான் நிறுவனத்திற்கு நம்பிக்கைக்கு பாத்தியமானேன் என்றாலும் அதன் பின்னர் பதவி உயர்வு பெற்றேன் என்றாலும் சரிதான். அத்துடன் காரைக்குடி சிவகங்கை, சிங்கம்புனரி, மானாமதுரை, திருப்பத்தூர், தேவகோட்டை ஆகிய ஊர்களில் செயல்பட்டுவரும் நிறுவனத்திற்கும் பொறுப்பு மேலாளராக பணிபுரிந்தேன் என்றால் காரைக்குடி கிளைக்கு உட்பட்ட நிறுவனங்களுக்கு மட்டும் மேலாளராக பணிபுரிந்தேன்.

2) நானும் புகார்தாரரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நானும் புகார்தாரரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதாலும், ஆரம்பத்தில் என் மீது வைத்த

நம்பிக்கையின்பேரிலும் அனைத்து நிறுவனத்திற்கும் நான் பொறுப்பு மேலாளராக இருந்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை நான் கொடுத்த நேரடியாக கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் எனது வழக்கறிஞர் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வக்காலத்து முதல் எனது முதல் விசாரணை வரை நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் வழக்கு நடத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் எனது குடியிருப்பு முகவரி 2/216, பாண்டியன் நகர், கழனிவாசல், காரைக்குடி என்ற முகவரியைதான் நான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக வாகனங்கள் பற்றாக்குறை இருந்தால் ஒரு டீலருக்கும் மற்றொரு டீலருக்கும் இடையே கையிருப்பில் உள்ள வாகனத்தை விற்றுக்கொள்வது வழக்கம் என்றால் சரிதான். அதேபோல் இராமநாதபுரம் இரயில்வே பீடர் ரோடில் சுபலெட்சுமி, பஜாஜ் நிறுவனத்திற்கு பல வாகனங்களை புகார்தாரர் நிறுவனங்களில் இருந்து விற்கபட்டுள்ளது என்றால் சரிதான்.

3) இராமநாதபுரம் சுபலெட்சுமி, பஜாஜ் நிறுவனத்திற்கு இராமநாதபுரத்தில் உள்ள இந்தியன் வங்கி மூலமாகத்தான் வர்த்தகம் நடந்துள்ளது என்றால் சரிதான். அவர்களது வங்கி கணக்கு எண் 6052947730 என்றால் சரிதான். புகார்தாரரிடம் இருந்த விற்கப்பட்ட வாகனங்களுக்கு உரிய தொகையை எனது வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வண்டி விற்ற தொகைகள் அனைத்தும், புகார்தாரர் நிறுவனங்களின் வங்கிகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. எனது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகைகள் அனைத்தும் மேற்படி இராமநாதபுரம் நிறுவனத்தின் மேலாளரிடம் இருந்து நான் தனிப்பட்ட முறையில் கடனாக பெற்ற தொகைகள்தான். நான் உண்மைக்கு புறம்பாக தனிப்பட் கடன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இராமநாதபுரம் நிறுவனத்தின் இந்தியன் வங்கி கணக்கில் இருந்து 22.04.2023 ரூ.145676.41/-, 09.02.2023 ம் தேதியில் ரூ. 127672/- 25.01.2023 அன்று ரூ. 123542/- மற்றும், 20.01.2023 அன்று ரூ. 139795.41/- ஆகிய தொகைகள் எனது தனிப்பட்ட

காரைக்குடி பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தின் மேலாளர் அந்த நிறுவனத்தின் முதலாளி கிடையாது என்றால் சரிதான். நான் அந்த நிறுவனத்தின் மேலாளரிடம் இருந்து கடன் வாங்கியிருந்தால் அவரின் வங்கி கணக்கில் இருந்துதான் பணம் கொடுத்திருப்பார் என்றும், அவர் வேலை பார்க்கும் இராமநாதபுரம் சுபலெட்சுமி பைனான்சின் தொகையை மாற்றம் செய்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டதற்கு தான் தனிப்பட்ட முறையில் அனுப்பியிருப்பதாக சொன்னார். அவர் பெயர் பாண்டியன் அவரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேன்.

4) எனது காரைக்குடி பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கு எண். 082161011000 7825 ஆகும். மேற்படி தொகைகள் எனது வங்கி கணக்கில் வரவு வைத்ததை காண்பிப்பதற்கு மேற்படி பேங்க் ஆப் இந்தியா வங்கி கணக்கில் இருந்து அதற்குறிய ஸ்டேட்மெண்ட் ஆப் அக்கௌண்ட்சை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எங்கள் நிறுவனத்தில் பணியாற்றிய சரத்பாபு மானாமதுரை புகார்தாரர் நிறுவனத்தில் மேலாளராக இருந்தார். அவர் அங்கிருந்த வாகனத்திற்கான முதல் தொகைகள் மற்றும், வாகன மாற்றம் செய்து பழைய வாகனம் விற்பனை செய்ததற்கான தொகைகள் மற்றும், நிறுவனத்தில் இருந்து கடன் பெற்று நிறுவனத்திற்கு திருப்பி செலுத்திய தொகைகள் எல்லாமே காரைக்குடி மெயின் கிளைக்கு என் மூலமாக வரும் என்றால் மொத்த தொகையும் என் மூலமாக வருவதில்லை, பெரியவர் நாராயணன், சின்னவர் இராமசாமி ஆகியோருக்கு வரவேண்டிய தொகைகள் சில தொகைகள் நேரடியாக காரைக்குடி நிறுவனத்திற்கு போல்டர் மூலமாக வரும் என்னிடம் கொடுக்கப்பட்ட தொகைகள் அனைத்தையும் நான் அவ்வப்போது பெரியவர் நாராயணன், சின்னவர் இராமசாமி ஆகியோரது நிறுவனங்களில் ஒப்படைத்து விடுவேன்.

5) எனது G pay எண் எனது தனிப்பட்ட அலைபேசி எண் 8925174140 ஆகிய எண்ணுடன் இணைத்துள்ளேன். மேற்படி G Pay எண்ணில் எனது இரண்டு வங்கி கணக்குகளை நான் இணைத்துள்ளேன். அதில் ஒன்று நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள காரைக்குடி பாங்க் ஆப் இந்தியா, மற்றொன்டு காரைக்குடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மெயின் கிளையில் உள்ளது. அதன் வங்கி கணக்கு எண் 003401000046775 ஆகும். நான் வேலைக்கு சேர்ந்தது முதல் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது வரையுள்ள எனது வங்கி கணக்கு விபரங்களை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். மேற்படி புகார்தாரர் நிறுவன ஊழியர் சரத்பாபுவின் இந்தியன் வங்கி கணக்கில் இருந்து எனது எனது UPI ID vveeratamil-1@okhdfcbank வரவாகி உள்ளது என்றால் சரிதான். அதே போல் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள தொகைகள் அனைத்தும், எனக்கு தனிப்பட்ட முறையில் ஸ்ரீராம் பைனான்ஸ், இன்டன்ஸ் வங்கி HDFC வங்கி, பஜாஜ் வங்கி, IDFC மற்றும் ரொக்க தொகைகளாக ரூ. 17 லட்சத்து 96 ஆயிரத்து 997/- ஆக வரவாகியுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் நிறுவனத்தின் ஊழியர்கள் கடன் பெற்று அதை திரும்ப செலுத்திய தொகைகளையும் நான் நிறுவனத்தில் சமர்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பரிவர்தனைக்கு வந்த பல பழைய வாகனங்களை விற்ற தொகைகளையும், புதிய வாகனங்களுக்காக ரொக்கமாக பெற்ற முதல் பிரிமியம் தொகைகளையும், நான் நிறுவனத்தில் செலுத்தாமல் நானே வைத்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் இருவருக்கும் பல தொழில்கள் உள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகன தொழிலுக்கு மட்டும் என்னை நம்பி பண பரிவர்ததனைகளை புகார்தாரர்கள் செய்தார்கள் என்றாலும் அதற்கு நான் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் கையாடல் செய்த தொகையை எனது தாயார் ஒத்துக்கொண்டு அதை குறிப்பிட்ட தேதிக்குள் திரும்ப செலுத்தி விடுவதாக கூறி ஒரு ஆதரவு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான் அந்த ஆதரவு ம.சா.ஆ. 2 என்றால் சரிதான் ஆனால் அது காவல் நிலையத்தில் வைத்து எழுதி

வாங்கப்பட்டது. மேற்படி ஆவணம் நான் என் தாயார் மற்றும் மனைவியுடன் சேர்ந்து எழுதிக்கொடுத்ததுதான் என்றால் சரியல்ல. நான் 01.06.2023 ம் ரூ. 100000/-தொகையினை புகார்தாரரிடம் திரும்ப கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி தொகை போக மீத தொகையினை 3 மாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவதாக கூறி மேற்படி ஆதரவினை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான் காவல் நிலையத்தில் வைத்து எழுதி வாங்கினார்கள். மேற்படி ஆதரவினை நான் வீட்டில் வைத்து எழுதிக்கொடுத்தேன் என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

6) இந்த வழக்கு காசோலைகள் அனைத்தும் எனது வங்கியில் இருந்து எனக்கு வழங்கப்பட்டதுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றாலும் சரிதான் ஆனால் காவல் நிலையத்தில் வைத்து எழுதிக்கொடுத்தது. காவல் நிலையத்தில் வைத்து என்னை மிரட்டி எழுதி வாங்கி விட்டார்கள் என்று காவல்துறை உயர் அதிகாரிக்களுக்கோ, சி.எம். செல்லிற்கோ புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி ரூ. 1 லட்சம் தொகை கையாடல் செய்ததற்காக கொடுத்தது என்றால் இல்லை நான் எழுதிக்கொடுதற்காக திரும்ப கொடுத்தது. வழக்கு காசோலைகள் அனைத்தும் நான் கையாடல் செய்ததற்காக நானாக முன்வந்து கொடுத்த காசோலைகள்தான் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு கசோலைகளை வதூலுக்கு தாக்கல் செய்தால் நிறுத்தம் செய்ய சொல்லி நான் வங்கிக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் காசோலைகளை திரும்ப புகார்தாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். இந்த காசோலை வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் காரணத்தை கூறி நான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவிடாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் என்னை முழுமையாக நம்பி பரிவர்தனைகளை என்னிடம் ஒப்படைத்தற்கு நான் நம்பிக்கை துரோகம் செய்து விட்டேன் என்றால் சரியல்ல. ம.சா.3 ஐ தெரியுமா என்றால் தெரியும்.

**அவரை குறுக்கு விசாரணை செய்ததற்கும் நான் நேரடியாக வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கையாடல் செய்தது தனிக்குற்றம் என்றாலும், காசோலை மோசடி வழக்கு தனிக்குற்றம் என்றாலும் நான் அதை மறைத்து காவல் துறையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்படாமல் எனது தெரிந்த காவல் துறையினர் மற்றும் நட்பு வட்டத்தில் உள்ள நிறுபர்கள் மூலம் என்னை கைது செய்ததாக செய்தி வெளியிடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் போடப்பட்டதாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கைக்கு முன் பிணை கோரி மனுதாக்கல் செய்தேனா என்றால் இல்லை. புகார்தாரரின் நிறுவனத்தில் இருந்து கையாடல் செய்த பணத்தினை திரும்ப கொடுக்காமல் பல்வேறு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதையும் தடுத்துவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காசோலை தொகைகளை புகார்தாரருக்கு கொடுக்க கட்டுப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் மனைவி மற்றும் என் அம்மாவை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். எனது வங்கி கணக்கு விபரம் அனைத்தையும் நீதிமன்றத்தில் சமர்பிக்க தயாராக இருக்கிறேன். நான் மாற்று முறை ஆவணச்சட்டத்தின் படி தண்டிக்கப்படவேண்டிய நபர் என்றாலும், காசோலை பணத்தை வட்டியுடன் திரும்ப செலுத்த கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.**

**( இந்த குறுக்கு விசாரணையை எதிரி தரப்பு கோரிக்கையை எற்று C.C. No. 11/2024, C.C. No. 51/2024, CC. No. 152/2023 ஆகிய வழக்குகளுக்கும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.09 18:17:21 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)